## கட்டுரையாளர் கட்டணம்

| | | |
|---|---|---|
| பேராசிரியர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் | : | ₹750 |
| ஆராய்ச்சி மாணவர்கள் | : | ₹550 |
| வெளிநாட்டவர் | : | ₹2000 |

## PAYMENT LINK (QR CODE)

| | |
|---|---|
| Name of Account Holder : | SANKARA RESEARCH ASSOCIATION |
| Account Number : | 17900200002410 |
| Name of the Bank : | THE FEDRALBANK LTD |
| Branch Address: | SARAVANAMPATTI, COIMBATORE-35. |
| IFSC Code: | FDRL0001790 |

## கருத்தரங்கக்குழு

## புரவலர்கள்

**திரு. டி. பி. இராமச்சந்திரன்**
நிர்வாக அறங்காவலர் மற்றும் செயலர்

**திருமதி. சந்தியா இராமச்சந்திரன்**
இணைச்செயலர்

**திருமதி. நித்யா இராமச்சந்திரன்**
துணை இணைச்செயலர்

## கருத்தரங்கக் குழுத் தலைவர்

**முனைவர் வி.ராதிகா**
முதல்வர்

## ஆலோசகர்

**முனைவர் சா. பெர்னார்டு எட்வர்டு**
துணை முதல்வர்

## ஒருங்கிணைப்பாளர்

**முனைவர் இரா.சதீஷ் மோகன்**
ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
அலைபேசி - 9677660781

## இணை ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் அ.இந்துமதி**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அலைபேசி - 9994233529

**முனைவர் ப.சசிகலா**
**முனைவர் சி.பூங்கொடி**
**முனைவர் நா.சாரதாமணி**
உதவிப்பேராசிரியர்கள்
தமிழ்த்துறை.

## பதிப்புக் குழு

**திரு. செ.வீரகண்ணன்**
களஞ்சியம் – சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்,
மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்

## அமர்வுக்குழுத் தலைவர்கள்

**முனைவர். க. தனலட்சுமி**
**முனைவர் பா. அருள்ஜோதி**
உதவிப்பேராசிரியர்கள்
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

# சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி
## (தன்னாட்சி)

சரவணம்பட்டி, கோயம்புத்தூர் - 641 035.
பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது,
AICTE (அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு) புது தில்லியால் அங்கீகரிக்கப்பட்டது.
NAAC அமைப்பால் 'A+' தரம் (இரண்டாம் சுழற்சி) பெற்று மறு-அங்கீகாரம் பெற்றது.
ISO 9001:2015 சான்றிதழ் பெற்ற நிறுவனம்.

## தமிழ்த்துறை
## மற்றும்

## களஞ்சியம் – சர்வதேச தமிழ் ஆய்வு இதழ் இணைந்து நடத்தும்

# பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்

## “பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகள்”
## அழைப்பும் அறிவிப்பும்.

**நாள் :** 17.06.2026
**இடம் :** டி.கே.பி. கருத்தரங்கக் கூடம்




Visit our website www.sankara.ac.in /sankara_cbe /sankaraarts

அன்புடையீர்

வணக்கம் கொங்கு மண்டலத்தில் 1983 இல் உருவாக்கப்பட்ட சுயநிதிக் கல்வி நிறுவனம் சங்கரா கல்வி நிறுவனம். இதன் கிளை நிறுவனமாக விளங்கும் சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி 1991 ஆம் ஆண்டு கல்விச்செம்மல் தெய்வத்திரு டி.கே.பட்டாபிராமன் அவர்களால் கோயமுத்தூர் கல்வி மற்றும் பண்பாட்டு அறக்கட்டளை சார்பில் அனைவருக்கும் தரமான கல்வியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டு 35 வருடங்களாகச் சமுதாயத்தில் அனைவரது கல்வித்தரத்தினை உயர்த்திச் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றது. மேலும் காது கேளாத, வாய்பேச இயலாத சிறப்பு மாணவர்களுக்கும் கல்வி கற்பிப்பதோடு அவர்களது வளர்ச்சியைச் சீரான பாதையில் கொண்டு செல்லவும் வழிகாட்டுகின்றது. தேசிய தர மதிப்பீட்டுக்குழுவினரால் இரண்டாம் சுற்றில் A + தகுதி பெற்று 2024-2025 முதல் தன்னாட்சிக் கல்லூரியாகவும் செயல்பட்டுவருகிறது. பத்து இளங்கலைப்பாடப் பிரிவுகளையும், மூன்று முதுகலைப் பாடப்பிரிவுகளையும், மூன்று முனைவர் பட்ட ஆய்வுத்துறைகளையும் கொண்டுள்ளது.

தமிழ்த்துறை இளங்கலை மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தின் வாயிலாக மொழி ஆளுமையை வளர்க்கும் நோக்கில் நூலறிமும், விவாதம், பட்டிமன்றம், இலக்கியப் போட்டிகள் மற்றும் பண்பாட்டு கலை விழாக்களையும் நடத்தி வருகிறது. திண்டுக்கல் வளர்தமிழ் ஆய்வு மன்றத்தோடு இணைந்து 2018 ஆம் ஆண்டு இரு நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கினைச் சிறப்பாக நடத்தியது. 2018 ஆம் ஆண்டு மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகம் மற்றும் கோவை விஜயா பதிப்பகம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ் இலக்கியங்கள்: பன்முக நோக்கு என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை மிகச் சிறப்பாக நடத்தியது. இந்த ஆண்டு தமிழ்த்துறையும் களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழும் இணைந்து பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகள் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை நடத்தவுள்ளது. இக்கருத்தரங்கில் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கலாம்.

## கருத்தரங்க நோக்கம்

பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் என்பது வெறும் வரலாறு மட்டுமல்ல; அது நவீன காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு வாழ்வியல் கலை. பண்டைத் தமிழர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலகளாவிய சகோதரத்துவத்தையும், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற அறத்தையும் போற்றினர். இயற்கையோடு இயைந்த வாழ்வு ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) அடிப்படையில் நிலத்தைப் பகுத்து, அந்தந்த நிலத்தின் தன்மைக்கேற்ப வாழ்ந்தனர். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, நிலத்தையும் நீரையும் தெய்வமாக மதித்த தமிழர்களின் சூழலியல் அறிவை அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டும். பண்டைத் தமிழர்கள் திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர்கள். உரோமாபுரி முதல் தென்கிழக்கு ஆசியா வரை வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். சங்க கால உணவுகள் மற்றும் இயற்கை மருத்துவ முறைகளை இன்றைய வாழ்க்கை முறைக்கு ஏற்ப அறிமுகப்படுத்துவதே இக்கருத்தரங்கின் நேக்கமாக அமைகிறது.

## கட்டுரைத் தலைப்புகள்

கட்டுரையாளர்கள் கீழ்காணும் பகுதிகளை ஆய்வுக் களங்களாகக் கொண்டு கட்டுரைகள் வழங்கலாம்.

1) பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகள்
2) பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகள்
3) பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள்
4) பண்டைத் தமிழரின் வழிபாடுகள்
5) பண்டைத் தமிழரின் விளையாட்டுக்கள்
6) பண்டைத் தமிழரின் உணவு முறைகள்
7) பண்டைத் தமிழரின் மருத்துவ முறைகள்
8) பண்டைத் தமிழரின் புழங்கு பொருட்கள்
9) பண்டைத் தமிழரின் சமுதாயக்கோட்பாடுகள்
10) பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை

இவை போன்று தொடர்புடைய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் அமையலாம்.

## கட்டுரையாளர்களின் கவனத்திற்கு

- அனைத்துத் துறை சார்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆர்வலர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
- ஆய்வுக்கட்டுரைகள் கட்டுரையாளர்களின் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும்.
- ஆய்வு மாணவர்கள் நெறியாளர் அல்லது துறைத்தலைவர் பரிந்துரையுடன் ஆய்வுக்கட்டுரையை அனுப்புதல் வேண்டும்.
- நெறியாளர்களின் பரிந்துரை இல்லாத ஆய்வாளரின் ஆய்வுக்கட்டுரைகள் ஏற்கப்படமாட்டாது.
- ஆய்வுக்கட்டுரையை A4 தாளில் 1.5 இடைவெளியுடன் ஐந்து முதல் எட்டு பக்கத்திற்குள் யுனிக்கோடு Arial or latha எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து MS WORD இல் அனுப்ப வேண்டும்
- ஆய்வு கட்டுரைகளில் அடிக் குறிப்புகள், பாடல் எண், பக்க எண் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும். பணம் செலுத்தியதற்கான ஆவணங்களை மின்னஞ்சலில் அனுப்புதல் வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் பன்னாட்டுத் தரக்குறியீடு பெற்ற களஞ்சியம் ஆய்வு இதழில் (E-ISSN: 2456-5148) முறைப்படி வெளியிடப்படும்.
- CROSSREF DOI அங்கீகாரம்: ஆய்விதழில் வெளியாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் தனித்துவமான CROSSREF DOI எண் வழங்கப்படுகிறது.பரந்த தேடல் மற்றும் குறியீட்டு அங்கீகாரம்: இந்த இதழ் GOOGLE SCHOLAR மற்றும் பல்வேறு சர்வதேச ஆய்வுத் தளங்களில் (WIDELY INDEXED) இடம்பெற்றுள்ளது.
- UGC தரநிலைகள்: பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC APPROVED STANDARDS) நெறிமுறைகளுக்கு உட்பட்டு, மிக உயர்ந்த ஆய்வுத் தரத்துடன் பராமரிக்கப்படுகிறது.
- விருப்பமுள்ளவர்களுக்கு மட்டும் ஆய்வுத்தொகுதி (புத்தகமாக) கூடுதல் கட்டணத்துடன் வழங்கப்படும்.

**கட்டுரை மற்றும் கருத்தரங்க கட்டணம் செலுத்தியதற்கான ஆவணங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
tamilconference@sankara.ac.in

**கட்டுரையாளர்கள் பதிவு செய்ய**
https://forms.gle/8u7jpV1yT1zX9G3y9

**கட்டுரை அனுப்ப வேண்டிய நிறைவு நாள்:**
**31.05.2026**